சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 7520 /அ5/2022 நாள். 02.11.2022

பொருள்: தேர்வுகள் - ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I- பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வு - (தேர்வு நாள் : 19.11.2022)- நடைபெறுவது- தேர்வு மையங்களாக செயல்படும் பள்ளிகள் - மாணவர்கள் பாதுகாப்பு கருதி விடுமுறை அளித்திட தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: 1 இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை அவர்களின் செய்தி வெளியீட்டு எண். 1859 , நாள்: 23.10.2022

2 தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைய தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் கடித எண்.1564/ID.CI/2022 நாள்: 25.10.2022

------

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I பதவிகளுக்கான முதல்நிலை தேர்வானது எதிர்வரும் 19.11.2022 அன்று முற்பகல் மட்டும் நடைபெற உள்ளது. இந்நிலையில் 25.10.2022 அன்று பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும் அவ்விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் 19.11.2022 அன்று பணிநாளாக அனுசரிக்கவும் பார்வை 2 ல் காணும் தமிழ்நாடு அரசின் செய்தி குறிப்பின்படி அரசால் உத்தரவிட்டுள்ளது.

எனவே 19.11.2022 அன்று நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - I நடைபெறுவதற்கு எவ்வித இடையூறும் இன்றி 19.11.2022 அன்று மதியம் நடைபெறவுள்ள பள்ளி இரண்டாம் பருவத் தேர்வினை எழுதிட மட்டும் 11 மற்றும் 12ம் வகுப்பு மாணாக்கர்கள் பள்ளிக்கு வருகை புரிய நடவடிக்கை மேற்கொள்ள தேர்வு மைய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இரா. சி. [signature] 2/11/22

முதன்மைக்கல்வி அலுவலருக்காக,

சென்னை.

பெறுநர்

தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்/தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்

நகல்

1. ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை -06 தகவலுக்காக பணிந்துஅனுப்பலாகிறது.
2. தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது